[1971 அக்டோபர் 21

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவரவர்களே, இது ஒரு ஆண்டுக் கடன். ஓர் ஆண்டில் கொடுக்க முடியவில்லை என்றால், மூன்று ஆண்டு நீடித்துக் கொடுக்கிறோம் அதைத் தவிர. மேலும் நீடிப்பதில்லை.

Tractor workshops in districts

* 12 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Co-operatioh be pleased to state whether there is any proposal to start tractor workshops in all the District centres ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவரவர்களே, ஆம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இம்மாதிரி டிராக்டர் ரிப்பேர் ஒர்க் ஷாப்புகள் மாவட்டத்திற்கு ஒன்று இருக்கிறதா? மதுரை மாவட்டத்தில் இருக்கும் ஒர்க்ஷாப்பில் மற்ற மாவட்டங்களுக்கும் ரிப்பேர் செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே, மாவட்டத்திற்கு ஒரு ஒர்க் ஷாப் அமைக்கும் நோக்கம் உண்டா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவரவர்களே, இந்த வினா அப்படிப்பட்ட ஒரு ப்ராப்போசல் இருக்கிறதா என்பதைப் பற்றியது. அந்தப் ப்ராப்போசல் எவ்வளவு தூரம் நடைபெற்றிருக்கிறது என்பதுபற்றி, சென்னை, கோவை, திருவாரூர், திருச்சி, வேலூர் ஆகிய ஊர்களில் ஏற்கனவே இப்படிப்பட்ட டிராக்டர் பணிமனைகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. இந்த வருஷம் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் ஒன்று துவங்கப்பட இருக்கிறது. இதைத் தவிர, காஞ்சிபுரம், மதுரை, திருச்சி, விழுப்புரம், சேலம் ஆகிய நகரங்களில் வேளாண்மைத் தொழில் கழகம் டிராக்டர்கள் பழுது பார்க்கும் நிலையங்களைத் தொடங்கியிருக்கின்றன.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், ஏற்கனவே ப்ரபபோசலில் இருக்கக் கூடிய இந்த டிராக்டர் ஒர்க்ஷாப்புகளும், பழுது பார்க்கும் மனைகளும் இந்த ஆண்டு இறுதிக்குள் துவக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவரவர்களே, இந்த ஆண்டு கடலூரில் வேலை நடந்து கொண்டிருக்கிறது.

திருமதி. த. அ. அனந்தநாயகி : சார், தற்பொழுது எத்தனை டிராக்டர்கள் பழுதடைந்திருக்கின்றன, எத்தனை டிராக்டர்கள் இது சீர்திருத்தப்பட்டிருக்கின்றன என்ற விவரங்களை அமைச்சரவர்கள் கூறுவார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவரவர்களே, அம்மையார் அவர்கள் கேட்கும் அந்தத் தகவல் பற்றி தனி வினா போட்டால், விடை கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் கூறும்பொழுது மாவட்டத்திற்கு ஒரு பணிமனை இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். கோவையைப் பொறுத்தவரையில் ஒன்று இருக்கிறது. ஆனால் இப்பொழுது பஞ்சாயத்து ஒன்றியத்திலும் ஒரு டிராக்டர் என்று வாங்கப்பட்டிருக்கிறது.

1971 அக்டோபர் 21]

அதைப் போல் தனியாரும் வாங்குகிறார்கள். எனவே, டிராக்டர்கள் அதிகமாக இருப்பதால் ஒரு பணிமனையினால் இந்த ரிப்பேர்களை விரைவாகச் செய்ய முடியவில்லை. ஆகவே ஒரு கோட்டத்திற்கு ஒரு பணிமனை ஏற்படுத்த அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, ஒரு கோட்டம் என்று ரெவின்யூ டிவிஷனைப்பற்றிச் சொல்கிறார்கள் என்று கருதுகிறேன். கோட்டத்திற்கு ஒன்று என்று திட்டம் இல்லை. ஆனால் மத்திய அரசு ஒரு பிளாக்குக்கு ஒன்று—ஒரு கோட்டம் அல்ல—என்ற திட்டத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அதை ஏற்றுக் கொள்வதாக இருக்கிறோம்.

திரு. எம். சுரேந்திரன் : சார், இந்தப் பட்டறைகளை ஏற்படுத்தும் பொழுது ஒவ்வொரு பகுதியிலும் இவ்வளவு டிராக்டர்கள் இருக்கின்றன என்று கவனித்து அவைகளுக்குத் தேவையான பட்டறையாக அது இருக்குமா என்று ஆராயப்பட்டிருக்கிறதா ? இல்லையென்றால் இனிமேலாவது அப்படி ஆராய்ந்து நிர்ணயிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, எவ்வளவு டிராக்டர்கள் இருக்கின்றன என்பதை ஆராய்ந்துதான் அதற்கு வேண்டிய பணிமனைகள் தொடங்கப்படுகின்றன. ஆனால் எத்தனை டிராக்டர்கள் இந்தந்த ஊர்களில் என்ற தகவல் வேண்டுமென்றால், தனியாக வினா எழுப்புவதாகயிருந்தால் அதற்கு விடை சொல்லத் தயாராக இருக்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : மத்திய அரசு ஒரு பிளாக்குக்கு ஒன்று வீதம் டிராக்டர் பழுது பார்க்கும் மனையை ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னதாகச் சொன்னார்கள். அதற்கு வேண்டிய அளவு டிராக்டர்கள் இருக்கின்றனவா ? அப்படி பழுது பார்க்கக் கூடிய மனைகளை அமைப்பதால் பயன் இருக்கும் என்று ஆராயப்பட்டதா ? அதைப்பற்றி ஆராயாமலே அந்தத் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நான் முதலிலே சொன்னபடி இந்தத் திட்டம் மத்திய அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்டது. நாம் அதை ஏற்றுக் கொள்ளுவதாக இருக்கிறோம். மத்திய அரசு உதவி செய்வதை நாம் வேண்டாமென்று சொல்லாமல் ஏற்றுக் கொள்ளுவது நல்லது என்ற அடிப்படையில் ஏற்றுக் கொள்ளுவதாக இருக்கிறோம்.

திரு. சோ. அழகர்சாமி : டிராக்டர் ரிப்பேர் செய்யும் பணிமனைகளில் ரிப்பேர்களைச் சீக்கிரமாகக் கவனித்தாலும் டிராக்டர்களுக்கான டயர்கள் கிடைப்பதில் சிரமம் இருக்கின்ற நிலை இருக்கிறது. டயர்கள் வெளியிலே அதிகமான விலைக்கு விற்கப்படுகின்றன. ஆகவே, நம்முடைய பணிமனைகளிலோ அல்லது அக்ரோ இண்டஸ்ட்ரிஸ் கார்ப்பரேஷன் மூலமோ டயர்களை நியாயமான விலைக்கு டிராக்டர்கள் வைத்திருப்பவர்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தஞர் : இதைப் பற்றி என்னிடம் தகவல் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

பவானி வட்டத்தில் மண், நீர் பரிசோதனை நிலையம்

* 13 வினு—திரு. ஏ. எம். இராஜா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கிழ்க்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) கோவை கிழக்குப் (மாவட்டம்) பகுதிக்காக பவானி வட்டத்தில் மண், நீர் பரிசோதனை நிலையம் ஏற்படுத்தும் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இல்லை, ஐயா

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஏ. எம். இராஜா : அமைச்சர் அவர்கள் பதிலில் இல்லை என்று சொன்னார்கள். கோவை மாவட்டம் முழுவதற்கும் ஒரே ஒரு மண், நீர் பரிசோதனை நிலையம் இருப்பதால் பல இடங்களில் இருந்து மண் பரிசோதனைக்கு அனுப்பும்போது காலதாமதம் ஏற்படுவதோடு சில சமயங்களில் தவறுதல்களும் ஏற்பட்டு விடுகின்றன. இதை உத்தேசித்தாவது எங்களுடைய கோவை கிழக்குப் பகுதிக்காக பவானி வட்டத்தில் ஒரு மண், நீர் பரிசோதனை நிலையம் ஏற்படுத்த அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, தனி யாக அங்கு ஒரு பரிசோதனை நிலையத்தைத் துவக்க உத்தேசம் இல்லை என்றாலும் கோவையில் நடைபெற்ற மாநில மண்வள மேற் பார்வைக் குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டபடி அங்குள்ள பரிசோதனை நிலையத்திற்கு ஏற்கனவே ஒதுக்கப்பட்டிருந்த இலக்கைவிட, மாற்றியமைத்து அதற்குத் தனியாக இவ்வளவு இலக்குகள் ஒதுக்கப்பட வேண்டுமென்று அந்த இலக்கு உயர்த்தப் பட்டிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : சாயில் வாட்டர் டெஸ்டிங் நிலையம் வேளாண்மை முன்னேற்றத்திற்கு மிக மிக முக்கியமானது. ஆகவே, பிளாக்குக்கு ஒன்று வீதம் ஆரம்பிக்க அரசாங்கம் முயற் சிக்குமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அப்படி ஒன்றும் உத்தே சம் இல்லை. ஆனால் அந்தப் பணியை விரைவில் முடித்துக் கொடுப் பதற்காக இப்போது வாட்டர் மானேஜ்மெண்ட் என்ற திட்டம் புதிதாக பட்டுக்கோட்டையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இயங் கும் ஊர்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு தஞ்சை மாவட்டத்தில் செயல்பட்டு வருகிறது. மத்திய சர்க்காரில் இருந்து மேலும் இரண்டு ஊர்திக ள்அதற்காக அனுப்பப்பட இருக்கின்றன.

TRUTH ALONE TRIUMPHS